REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'

புதிய சந்தா விகிதம்

★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்

இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 15உ சனி (27—4—57) ★ வெளியூர்: சித்திரை 16உ ஞாயிறு (28—4—57) இதழ் [274

குறைந்த வருமானமுடையோர்க்கு தொழில்!

சென்னை மாநிலத்தில் கடுமையான வேலையில்லாக் கொடுமை

டெல்லியின் அவசர உதவி தேவை

மத்திய மந்திரியிடம் தொழிற்சங்கத் தலைவர் மகஜர்

சென்னை, ஏப். 27—

"வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவருக்கு, நிவாரணம் அளிப்பதுபற்றி திட்டக்குழு, எந்தவித உருப்படியான யோசனையோ திட்டமோ கூறியதாகத் தெரியவில்லை.

"சென்னையில் வேலையில்லாத் திண்டாட்டம்பற்றிய நிலைகுறித்துப் பூரணமான விசாரணை ஒன்று நடத்தவேண்டும்.

"மாநிலத்தில் வேலையற்றிருப்போர் எல்லாம் கட்டாயமாக வேலை தேடித்தரும் நிறுவனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கோரும் சட்டம் இயற்றவேண்டும்"

என்று கோரி, சென்னை நகர தொழிற்சங்கக் கவுன்சில் துணைத்தலைவரான எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டெல்லி சென்று, திட்ட மந்திரி ஜி. எல். நந்தாவிடம் கோரிக்கை மனு ஒன்றைத் தந்துள்ளார் எனத் தெரிகிறது.

அவர் மேலும் அந்த மனுவில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"வேறு பல நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுடன், கதவடைப்பு, மற்றும்பலர் காரணங்களால், மூடப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்தையும் திறக்குமாறு சர்க்கார் உத்தரவிட வேண்டும்.

"வேலை தேடித்தரும் நிறுவனத்தில் பெயர்ப் பதிவு செய்து ஆறு மாதங்களாகியும் வேலையற்றிருப்போருக்கு, டெல்லி சர்க்கார், ஏதாவது பொருள் உதவி கட்டாயமாகச் செய்ய வேண்டும்"

தவணை முறையில் தையல் மிஷின் விநியோகம்

தமிழ் நாட்டவர் அல்ல—பலன் பெறுவோர் பம்பாய், பீகார் மாநிலத்தவரே!

புதுடில்லி, ஏப். 26—

டில்லிப் பேரரசின் தொழில்—வர்த்தகத்துறை இலாகாவின் கீழ் உள்ள தேசீய சிறு தொழில் கார்ப்பொரேஷன், குறைந்த வருமானமுடையவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கென, திட்டம் ஒன்றை சில மாதங்களுக்கு முன் துவங்கியதாம்!

தையல் இயந்திரங்களை வாடகைத் தவணை முறையில் வாங்கிக்கோள்வது என்பதே அந்தத் திட்டம்!

இந்தத் திட்டமும் வழக்கம்போல வடநாட்டு மக்களுக்கே பயன்படுவதாக அமைந்திருக்கிறது!

சமுதாய நலத் திட்டங்கள் அமுல் செய்யப்படும் பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானமுடையவர்களுக்கு, இதுவரை சுமார் 300 இயந்திரங்கள் இந்த முறையில் விநியோகிக்கப்பட்டுள்ளனவாம்!

பீகார், பம்பாய், கட்ச் முதலிய வடநாட்டு மாநிலங்களில் உள்ள சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில், உள்ளவர்களுக்கே இந்தத் திட்டம் இதுவரை பலன் தந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டப்படி தேவைப்படுகிற தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்படுவதும் வடநாட்டில்தான்!

ஊதியான தையல் இயந்திரத் தொழில் நிறுவனத்திடம் தான் டில்லி சர்க்கார் சுமார் 1,000 இயந்திரங்களுக்கு 'ஆர்டர்' தந்திருக்கிறார்களாம்!

இப்போது 1,130 தையல் இயந்திரங்கள், பல சமூக நலத் திட்டப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவாம்!

கூலி உயர்வு கேட்டதின் விளைவு

ஆலையையே மூடிய அக்கிரமம்

கண்டும் காணாததுபோல் சர்க்கார் நடிப்பு?

சென்னை, ஏப். 27—

பல ஆண்டுகளாக தொழிலாளர்கள் எழுப்பிவந்த கோரிக்கை முழக்கங்களுக்கு செவிமடுக்க மறுத்திவிட்டு, பின்னர் தொழில் நீதி மன்றம் வழங்கிய 'அவார்ட்' பிரகாரம், அடிப்படைச் சம்பளம் தினம் இரண்டு ரூபாயாவது தரவேண்டுமென இந்த மாநில காங்கிரஸ் சர்க்கார் வேண்டாவெறுப்பாகச் சிபாரிசு செய்தனர், ஒரு தொழில் முதலாளிக்கு!

ஆனல் அந்தச் சிபாரிசையும் ஏற்க மறுத்துவிட்டாராம், திருவொற்றியூரில் உள்ள கே. சி. பி. தொழிற்சாலையின் அதிபர்!

தொழிலாளர்கள், இந்தச் சிபாரிசினை அமுல்நடத்தக் கோரி கடந்த 11-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் துவங்கினர்.

300 தொழிலாளர்களின் இந்த நடவடிக்கையைக் கண்ட நிர்வாகத்தினர் 16-ந் தேதியன்று ஆலையையே மூடிவிட்டனராம்!

இதனை, கண்டும் காணாதது போல இருக்கின்றது, இந்தச் சர்க்கார்!

விளைவு, இன்று சுமார் 300 தொழிலாளரும், அவர்தம் குடும்பங்களும் நடுத்தெருவில் நிற்க நேரிட்டுள்ளது! (ஒ-கி.)

இலங்கை அரசியலைத் திருத்த ஏற்பாடு

பிரதமர் பண்டார நாயகா தீர்மானம் நிறைவேற்றம்

கொழும்பு, ஏப். 26—

இலங்கையைக் குடியரசாக்குவதற்கும், இதற்கான ஏற்பாட்டிற்கும் பிறவற்றிற்கும் இலங்கை அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வது பற்றியும் பரிசீலனை செய்ய ஒரு பொதுக்குக் குழு ஏற்படுத்த வேண்டுமென்று பிரதமர் பண்டார நாயகா முன்மொழிந்த தீர்மானம் இலங்கை பிரதிநிதிகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தக் குழு, மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வழிவகைகள் மேல்சபை பிரதிநிதிகள் சபை நியமன உறுப்பினர்கள் அந்தஸ்து, சர்க்கார் — நீதி இலாகா உத்தியோகங்கள் முதலியன பற்றி ஆராயும் என்று தெரிய வருகிறது.

விழுப்புரம் தொகுதி தேர்தல் வழக்கு

20-4-57 அன்று விழுப்புரம் தொகுதி தேர்தல் வழக்கு மனு, தோழர் எம். சண்முகம் அவர்களால் டில்லி தேர்தல் ஆணையாளருக்கு அஞ்சல் மூலம் தாக்கல் செய்யப்பட்டது.

'நேரடி நடவடிக்கைக்குத் தயாராகுக'

கேரள இ. தே. தொழிற் சங்கப் போக்கு

தங்களது போனஸ், மற்றும் சம்பள உயர்வுக் கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கையில் ஈடுபடத் தயாராகுமாறு, தேயிலை, காப்பி, இரப்பர் தோட்டத் தொழிலாளர்களை, கேரள மாநில இந்தியத் தேசீய தொழிற் சங்கக் காங்கிரஸ் கேட்டுக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது.

தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்திய பின்னரும் தோட்ட முதலாளிகள், தொழிலாளரின் குறைந்த பட்ச கோரிக்கைகளைக் கூட ஈடேற்றித் தரச் சம்மதிக்கவில்லை.

சர்க்கார் நியமித்த தோட்டத் தொழிலாளர் உறவுக் கமிட்டியின் முன்பாக இந்தக் கோரிக்கைகள்வைக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும், பலன் ஏதும் இல்லை!

கடந்த பொதுத் தேர்தல்களின்போது கம்யூனிஸ்டு கட்சி, 'மாநிலத்தில் உள்ள தொழிலாளரின் சம்பளம் 25 சத விகிதம் உயர்த்தப்படும்' என்று தெரிவித்திருந்தது; அத்துடன், 'தரப்படாத சம்பளம் என்று கருதப்பட்டு, போனசும் 12·5 சதவிகிதம் உயர்த்தப்படும்' என்றும் கூறியிருக்கிறது. ஆனல், இந்த இரண்டு உறுதி மொழிகளும் பூர்த்தி செய்யப்படவில்லை. தொழிலாளர் அளவுக்கு அதிகமாகப் பொறுமை காட்டிவிட்டனர்!

எனவே, இனி நேரடி நடவடிக்கையில் ஈடுபடத் தொழிலாளர் தயாராகஇருக்கவேண்டும்' என்று தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசின் செயற்குழு கூறியிருக்கிறதாம்.

'பக்தூனிஸ்தான் பிரியவேண்டும்'

பாகிஸ்தானுக்கு விரோதமானதல்ல என்கிறார் அப்துல் கபார்கான்

'பக்தூனிஸ்தான் பகுதியைத் தனியாக பிரித்துவிடவேண்டும் என்ற கோரிக்கை பாகிஸ்தானுக்கு விரோதமானதல்ல' என்று கான் அப்துல் கபார்கான் இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சாபியர் வாழும் பகுதிக்கு பஞ்சாப் என்றும், சிந்தியர் வாழும் பகுதிக்கு 'சிந்த்' என்றும் பெயர் அமைக்கப்பட்டுள்ளதைப் போல, பக்தூன்கள் வாழும் தொடர்புள்ள பகுதிகளை ஒன்றுகச் சேர்த்து 'பக்தூனிஸ்தான்' என்று தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று கோரினர்.

பின்னர் அவர், இதற்கான போராட்டத்தில் கலந்து கொண்டு தியாகம் புரிந்துள்ளவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

சாதி ஒழிப்புப் போராட்டம்

மே. 5-ல் தி. க. நடத்தும்

வரும் மே 5-ந் தேதியன்று, சிற்றுண்டி, உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகளில் பொறிக்கப்பட்டுள்ள சாதிப் பெயர்களை அகற்றும் கிளர்ச்சியை தாம் நடத்தப் போவதாக தி. க. தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அறிவித்துள்ளார்.

கேரளத்தில் 'மே தினம்' பொது விடுமுறை நாள்

கேரள மாநிலம் முழுவதும் மே தினம் பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படும். அன்று, பாங்கிகள் மட்டுமே வேலை செய்யும்.

வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளருக்கு நஷ்ட ஈடு

டில்லி கொண்டுவரும் அவசரச் சட்டம்

புதுடில்லி, ஏப். 26—

"நியாயமான காரணங்களுக்காகக்கூட மூடப்படுவதானலும் அல்லது நிர்வாக மாற்றம் ஏற்படுவதானலும், வேலையிலிருந்து நீக்கப்படுகிற தொழிலாளருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்,"

என்று, டில்லி சர்க்கார் சீக்கிரமே ஒரு சட்டம் கொண்டுவருவார்கள் என்று தெரியவருகிறது.

இந்தச் சட்டம், வேலை இழந்தவர்களும் வேலையிலிருந்து விரட்டப்படுவர் என்ற அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளவர்களுமான சுமார் 20,000 பேருக்கு நிவாரணம் தரக்கூடியது என்றும், அகமதாபாத், கான்பூர், மேற்கு வங்கம் ஆகிய இடங்களில் உள்ள இந்தத் தொழிலாளருக்குப் பலன் தரும் இந்தச் சட்டம், கடந்த 1956 டிசம்பர் முதல் அமுலாவதாகக்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

இந்தியாவில் 7,74,811 பேருக்கு வேலையில்லையாம்

வேலை தேடித்தரும் நிலையங்களில் பதிவு செய்துகொண்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை பிப்ரவரி திங்கள் இறுதியில் 7,74,811 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி திங்களில் மொத்தம் 12,827 பேர்களுக்கு மட்டுமே வேலைத் தேடித்தரப்பட்டதாம்.

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 27—4—57 சனி

விதண்டாவாதம்!

பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியை மட்டுமேதான் நமது கழகம் எதிர்த்துப் போரிட்டது. ஆனால் மற்றக் கட்சிகளோ, காங்கிரசுக் கட்சியையும் உடன் இணைத்துக் கொண்டு நமது கழகத்துக்கு எதிராகப் போரிட்டன.

அரசியல் முதன்மை எதிரியாக நமது கழகத்தால் கொள்ளப்பட்டிருந்த காங்கிரசுக் கட்சி கூட, நமது கழகத் தலைவர்களைத் தனிப்பட்ட முறையில் வரைகடந்துத் தாக்கிப் பேசவில்லை. இரண்டொரு காங்கிரசு தலைவர்களெனப்படுவோர் நீங்கலாக மற்றவர் அனைவரும் குறிப்பிட்ட வரம்புக்குள்ளாகத்தான் நமது கழகத்தைத் தாக்கிப் பேசிவந்தனர்.

ஆனால், விதாண்டாவாதக் கட்சி என்றப் பெயருக்குப் பொருத்தமாக இருக்கின்ற தமிழ் நாட்டுக் கிளை கட்சி ஒன்றைச் சேர்ந்த உருவங்கள் அனைத்தும், ஒன்றைப்போல் மற்றொன்று, சாமானிய மக்கள் கூட கேட்கச் சகிக்காத இழி சொற்களால் நமது கழகத் தலைவர்களை ஏசிவந்தன. எதிர்த்துத் தாக்குதல், இடிக்கித் தாக்குதல், பாய்ந்துத் தாக்குதல், பதுங்கித் தாக்குதல், மறைந்துத் தாக்குதல், மாற்றுருவில் தாக்குதல் என்ற ரீதியில், நமது கழகத் தலைவர்களைக் குறைத்துப் பேசிவந்தது அந்த விதண்டாவாதக் கட்சி. ஆனால் வினைவோ, யாருக்காகவோ தான் வெட்டிய அதே படுகுழியில் தானே புதைந்து போகவேண்டியதாகி விட்டது.

தேர்தலில் ஏற்பட்ட உருக்குலைவுக்குப் பிறகாவது அந்த விதண்டாவாதக் கட்சியில் இருக்கும் இரண்டொருவர் தேர்தல் நேரத்தில் ஏற்பட்ட அறிவுத் தடுமாற்றம் நீங்கப் பெறுவர் என எதிர்பார்த்தோம். ஆனால், நாம் எதிர்பார்த்ததைப் பொய்யாக்க வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, தேர்தல் நேரத்தில் தாக்குண்ட மூளைக்குழப்ப வியாதியிலிருந்து இன்னும் தாம் முழு அளவில் குணப்படவில்லை என்பதை, அதே இரண்டொருவர் இன்னும் தமது பேச்சு மூலம் பறைசாற்றி வருகின்றனர்.

அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்களுக்காக நாம் இரக்கப்படுவோமாக.

இந்தியப் பேரரசிடம் குவிந்துகிடக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, திராவிட நாடு கோரிக்கை கெடுத்துவிடக் கூடுமாம். இந்தத் தத்துவத்தை விளக்கும் வகையில், குவிந்திருக்கும் அதிகாரத்தைப் பரவலாக ஆக்கக் கூடாது எனப் பிடிவாதமாக இருப்பவர்கள், பிரிவினைக் கோரிக்கையைச் சுட்டிக்காட்டி, அதிகாரத்தை மேலும் கூட்டுவதின் மூலம் பிரிவினைக்கு ஊக்கமளித்ததாக ஏற்பட்டு விடும்; எனவே அதிகாரத்தைப் பரவலாக ஆக்கக்கூடாது எனத் தடைபோட முன்வந்துவிடுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது, விதண்டாவாதக் கட்சியின் சார்பில்.

அதிகாரத்தைப் பரவலாக்கும் கோரிக்கைக்கும் தனித் திராவிட நாடு கோரிக்கைக்கும் உறவுமுறை ஏதாவது இருக்கின்றதா இல்லையா என்பதை ஆராய்வதற்குமுன், அதிகாரத்தை மாநிலங்களுக்கிடைப் பரவலாக விட்டுவைக்க மனமில்லாமல், ஒரே இடத்தில் குவித்துவைக்கவேண்டிய கட்டாயம் ஏன் ஏற்படவேண்டும்? அம்மனப்பாங்கில் மறைந்து கிடக்கும் உண்மை என்ன? என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

திராவிட விடுதலை முழக்கம் கிளப்பப்படாத நேரத்தில்தான், மாநிலங்களிடம் நியாயமாக இருந்து தீரவேண்டிய அதிகாரம் அனைத்தையும் வலுக்கட்டாயமாகப் பறித்து மத்திய அரசிடம் திணிக்கப்பட்டிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, திராவிட நாடு விடுதலை கோரிக்கைக்கும், அதிகாரம் அனைத்தும் டில்லி அரசிடம் அக்கிரமமாகக் குவிக்கப்பட்டிருப்பதற்கும் எந்த விதத் தொடர்பும் இருக்கவில்லை என்பதையும் விளக்கமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

எனவே, திராவிட விடுதலை கோரிக்கையைக் காட்டி, அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்ற கிளர்ச்சியைத் தடுத்துவிட, டில்லி அரசு முன்வரக்கூடும் என்ற வாதம் எழுவதற்கே இடமில்லை. அப்படி ஒருவேளை எழுந்தாலும், அந்த வாதத்தை அறிவுடை மக்கள் ஒப்பார்.

தம்மிடம் சிக்கியுள்ள அதிகாரத்தை மாநிலங்களிடை சரிசமமாகப் பகிர்ந்துகொள்ள இந்தியப் பேரரசு இணங்கிவிட்டது போலவும், அதை உடனடியாகச் செயலாற்ற விடாது திராவிட நாடு விடுதலை கோரிக்கை முட்டுக்கட்டை போட்டு வருவதுபோலவும், கற்பனை செய்து விதண்டாவாதிகள் பேச முன்வருவது விந்தையாக இருக்கிறது.

அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்று, தங்கள் கடைவாயிலில் வந்து நின்று ஜனநாயக சக்தி இடியோ இடி யென முழக்கமிடுவதுபோலவும் அவ்வாறு முழங்கும் நேரத்திலேயே திராவிட நாடு விடுதலை கோரிக்கைக்கண்டு அச்சமாக இருக்கிறது என அந்த ஜனநாயக சக்தி ஒப்பாரி வைப்பது போலவும், விதண்டாவாதிகள் கற்பனை செய்துகொண்டு பேசுவது, டில்லியின் ஆதிக்க வெறியைப் பொதுமக்கள் கருத்திலும் கண்ணிலும் இருந்து மறைப்பதற்கேயாகும். அதுவுமன்றி, அதிகாரத்தைப் பரவலாக்கும் தங்கள் கோரிக்கைக்கு முழுத்தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தாலும், அவ்வாறு தோல்வி ஏற்பட்டுவிட்டால் அப்பொழுது தங்களுக்கு உண்டாகக்கூடிய துக்கத்தையும் வெட்கத்தையும் மறைத்துக் கொள்ளுவதற்காகவும், இன்று முதலே ஒரு காரணத்தைத் தேடுகின்றனர் விதண்டாவாதிகள் என்பதும் தெரிகிறது.

'டில்லி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கத் தவியாகத் தவித்தது. ஆனால் திராவிடநாடு கோரிக்கை கண்டு, அதிகாரத்தைப் பரவலாக்கினால் இந்தியத் துணைக் கண்டம் பிரிந்து விடுவதற்கு வழி செய்ததாகிவிடுமோ என அஞ்சி, அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க இயலாது எனக் கண்டிப்பாக மறுத்துவிட்டது இந்தியப் பேரரசு. எனவே, பொதுமக்களே திராவிட நாடு கோரிக்கையினரை விடாதீர்—விரட்டுங்கள் என்று', அதிகாரத்தைப் பரவலாக்கும் முயற்சியில் தங்களுக்குப் பல்லுடைந்த பிறகு, நமது கழகத்தின் மீது பழிபோட்டுப் பேச, இப்பொழுது இருக்கிற விதண்டாவாதிகள் வகைசெய்து வருகின்றனர் என்ற மகத்தான உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்பது ஒன்று; திராவிடத்தை விடுவிக்க வேண்டும் என்பது மற்றொன்று. இரண்டு கோரிக்கைக்கும் தொடர்பு உண்டு என்றாலும், வெவ்வேறு அடிப்படையைக் கொண்டு இயங்குபவைகளாகும். இரண்டையும் ஒன்றாக்கிக் குழப்புவதும், ஒன்றுக்கு ஒன்று முட்டுக்கட்டையாக இருக்கிறது எனப் பேசுவதும், அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதற்குச் சமமாகும்.

மக்கள் நலனைப் பாதுகாக்க முயற்சி

முன்னாள் கவர்னர் தலைமையில் புதிய அரசியல் கட்சி துவக்கம்

நாகபுரி, ஏப். 26—

'விதர்ப்பப் பகுதியைச் சேர்ந்த மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கென புதிய அரசியல் கட்சி ஒன்று துவங்கப்பட்டிருக்கிறது; அதற்கு 'விதர்ப்ப சமிதி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்தின் முன்னாள் கவர்னர் எம். எஸ். ஆனே, கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கல்லூரி நிறுவுவதற்கு ரூ. 2 இலட்சம் உதவி

பொள்ளாச்சி, ஏப். 25—

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பொள்ளாச்சியில், 'நல்லமுத்து கவுண்டர் முனிசிபல் கல்லூரி' என்ற பெயரில் ஒரு கல்லூரியை' வரும் ஜுன் திங்களில் துவங்குவதற்கு ரூ. 2 இலட்சத்தை நன்கொடையாக கோவையைச் சேர்ந்த திரு. எஸ். பி. நல்லமுத்து (கவுண்டர்) என்பவர் தந்துள்ளார் என்று தெரியவருகிறது.

தமிழ் நாட்டில் உருளைக்கிழங்கு சாகுபடி

சென்னை, ஏப். 25—

உருளைக்கிழங்கு, நீலகிரி மாவட்டத்தில் முக்கியமான பயிராகும்; சேலம், மதுரை மாவட்டங்களில் சிறிது அளவில் பயிர் செய்யப்படுகிறது.

கடந்த டிசம்பர் முடிய மாரிகாலப் பயிராக உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு சுமார் 1,750 ஏக்கர்களாகும். சென்ற ஆண்டின் இதே காலத்தில் சுமார் 1,400 ஏக்கரில்தான் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்பட்டிருக்கிறது.

'இந்தியக் குடிமகன்' என்ற பெயரால் குயுக்தித் திட்டம்

மாநில அரசுகளின் உரிமை பறிபோகிறது

அமுலில் உள்ள நிபந்தனையைத் தகர்க்க முயற்சி

புதுடில்லி, ஏப். 25—

இந்தியாவின் ஒரு சில மாநிலங்களில் அரசாங்க உத்தியோகம் பெறுவதற்கு அந்த மாநிலத்திலேயே குறிப்பிட்ட காலத்திற்கு வசித்து இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இருந்துவருகிறது.

இந்த விதியை ரத்து செய்ய மத்திய அரசாங்கம் இப்போது சட்டம் கொண்டுவருமென்று தெரியவருகிறது. சட்டத்தின் இறுதி நகலை தற்போது பரிசிலித்துவருகின்றனராம்!

இந்தப் புதிய சட்டம் கொண்டு வரப்படுவதின் உள் நோக்கம், 'இந்தியக் குடிமகன்' என்ற பெயரால் எவரும்—எங்கும் வேலையில் நியமனம் பெறலாம் என்பதேயாகும்!

மே மாதம் ஆரம்பமாகும் பாராளுமன்றக் கூட்டத்தில் இந்த சட்டம் அநேகமாகக் கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

தற்போது மொழி அடிப்படையிலே ஒரு சிலருக்கு பாரபட்சம் காட்டப்படுகிறதாம்! இந்தக் குறையையும் புதிய சட்டம் நிவர்த்தி செய்யுமாம்!

மாநிலப் புதிய அமைப்பு மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது பண்டித பந்த் பேசுகையில், 'ஒரு நபர் ஒரு பகுதிக்கு வெளியில் வசித்தார் என்பதற்காகச் சொத்துக்கள் வாங்கவோ, வாணிபம் நடத்தவோ, உத்தியோகம் பெறவோ இடையூறு இருக்காது' என்று உறுதி அளித்துப் பேசியுள்ளது நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சென்னை அரசாங்கப் பஸ் வருமானம்

மார்ச்சு மாத வசூல் விவரம்

சென்னை, ஏப். 25—

1957 மார்ச் மாதத்தில் சென்னை அரசாங்கப் பஸ் போக்குவரத்து மூலம் வசூலான தொகை ரூ. 13,50,800; பிப்ரவரி மாத வசூல் 12,90,200; ஆனால் இந்த இரு மாதங்களிலும் ஓடிய பஸ்களின் எண்ணிக்கை ஒரே அளவுதான்.

பிரயாணம் செய்தவர்களின் எண்ணிக்கை 1,07,53,100-லிருந்து 1,13,38,620-க்கு உயர்ந்தன.

சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் மொத்தம் 283 பஸ்கள் ஓடியது; ஆனால் இந்த இரு மாதங்களில் ஓடிய பஸ்களின் எண்ணிக்கை 313-லிருந்து 322 வரை ஆகும்.

1957 மார்ச் 31-ல் கையிருப்பிலிருந்த மொத்த பஸ்களின் எண்ணிக்கை 445 ஆகும்.

இந்த மாதத்தில் 5 'லேலண்டு காமெட்' பஸ்கள் புதிதாக விடப்பட்டன. பழைய வண்டிகள் இரண்டு, மோசமடைந்துவிட்ட காரணத்தால் ஒதுக்கப்பட்டு விட்டது.

தீவிரமாக அமுல் செய்யப்படுமாம்!

மதுவிலக்கில் அமைச்சர் அக்கறை

சென்னை, ஏப். 25—

மதுவிலக்குச் சட்டம், சூதாட்டச் சட்டம் இவைகளைக் கடுமையாக அமுல் நடத்த மாநிலமெங்கும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், அடுத்த ஆறு மாத காலத்திற்குள் பொதுவான நடவடிக்கைகளும், மூன்று மாத காலம் தீவிர நடவடிக்கைகளும் எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

இந்திய சர்க்கார் சக்திக்கு உட்பட்டதல்லவாம்!

கண்டிக்கத் தவறமாட்டார்களாம்!

ஐதராபாத், ஏப். 25—

அணுசக்தி ஆயுத சோதனைகளைப் பற்றி இந்திய அரசாங்கம் இப்போது வன்மையாகக் கண்டித்து வருவதுபோல் இனியும் தொடர்ந்து கண்டித்து வருமாம்!

"ஆனால், ஒரு காரியத்தைச் செய்வதிலிருந்து மற்ற நாடுகளைத் திருப்புவதென்பது இந்திய சர்க்காரின் சக்திக்கு உட்பட்டதல்ல"

என்று, பண்டித நேரு, ஆந்திர சட்டசபை உறுப்பினரொருவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறாராம்!

புற்றுநோய் ஏற்பட வித்தூன்றிவிடும்!

பிரபல விஞ்ஞானி எச்சரிக்கை

பாரிஸ், ஏப். 25—

அணுகுண்டு அல்லது நீர்வளிக் குண்டு சோதனைகளை உடனே நிறுத்தாவிட்டால், காற்றில் பரவி வரும் கதிரியக்கத்தினால் புற்றுநோய் ஏற்படும் என்று பிரெஞ்சு விஞ்ஞானியும் நோபல் பரிசு பெற்றவருமான பேராசிரியர் ஜோலியட் கியூரி தெரிவித்துள்ளார்.

வளரும் இளம் குழந்தைகள் இதனால் பாதிக்கப்படுவர் என்றும் எதிர்காலச் சந்ததியினருக்கு இது பேரபாயமாக உள்ளது என்றும், இது குறித்துப் பலர் அலட்சியமாக உள்ளனர் என்றும், எதிர்காலத்தில் இது பெரிய கேடுகளை விளைவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் 1946 முதல் 1950 வரை அணுசக்தி ஹைகமிஷனராகப் பதவி வகித்தார்; கம்யூனிஸ்டுகளின் அனுதாபி என்று கருதப்பட்டு அவர், அப்பதவியிலிருந்து பின்னர் விலக்கப்பட்டார்.

எப்போதும் போலவே வாழ்வார்களாம்!

கதிர் இயக்கத்தால் ஆபத்து ஏதும் இல்லையாம்!

புதுடில்லி, ஏப். 24—

திருவனந்தபுரம் கடலோரப் பகுதிகளில் மானேஸைட் மணலிலிருந்து கிளம்பும் கதிரியக்கம் மனித சமுதாயத்தைப் பாதிக்குமாதலால், இதுபற்றி ஆராய்ச்சி நடத்தவேண்டுமென்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கருத்தறிவித்தார்.

இந்திய அணுசக்தி ஆராய்ச்சிக் குழுத் தலைவர் டாக்டர் எச். ஜே. பாபா இதுபற்றி கருத்தறிவிக்கையில் கேரள மக்களுக்கு இதனால் ஆபத்து எதும் நேராது என்றும், 2,000 ஆண்டுகளாக வாழ்ந்துவந்த மக்கள் அங்கு நிச்சயம் எப்போதும்போல வாழ்வார்கள் என்றும், அமெரிக்க விஞ்ஞானிகள் எதை வேண்டுமானாலும் கூறட்டும் என்றும், அதற்காக கேரள மக்கள் கவலைப்படத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிபெற்ற தி. மு. கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்ளுக்கு

பொன்மலையில் பாராட்டு விழா

கழகக் கட்டிடம் வாங்க ரூ. 4,250 நிதியளிப்பு

15-4-57 பகல் 12 மணிக்கு பொன்மலைப்பட்டி டாக்டர் பி. எஸ். பி. நாயுடு அவர்கள் பங்களாவில் தி. மு. கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் உணவு விருந்தும், பிற்பகல் $4\frac{1}{2}$ மணிக்கு சுவைநீர் விருந்தும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பொன்மலைப்பட்டி முழுவதும் பல வரவேற்பு வளைவுகளாலும் கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விழாவிற்கென, பொதுச்செயலாளர் உருவம் பொறிக்கப்பட்டு, பங்களா முகப்புபோல சித்தரிக்கப்பட்ட மேடை பல வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாலை 6 மணிக்கு தோழர் கே. காமாட்சி தலைமையேற்று, திருச்சி—2. தொகுதியில் தோற்ற காரணத்தை விளக்கியும், இனிமேல் மேற்கொள்ளவிருக்கும் வேலைத் திட்டத்தைக் குறித்தும் பேசினார்.

பின்னர், வெற்றியின் அறிகுறியாக 17 வெடிகள் முழங்கியதும் தலைவர்களுக்கு பாராட்டு விழா குழு சார்பிலும் தேர்தல் நிதிக் குழு சார்பிலும் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பொன்மலை இரயில்வே தொழிற்சாலையில், தொழில்வாரியாகப் பணியாற்றும் தொழிலாளர்கள் சார்பில் கைத்தறித் துண்டு — மலர் மாலைகள் — வெண் பொற்காசுகளும், தனிப்பட்டவர்களின் சார்பில் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் அன்பில் தருமலிங்கம், இரா. செழியன் ஆகியோர் தேர்தலில் வெற்றி—தோல்விகளைக் குறித்துப் பேசினர்.

பின்னர், தோழர்கள் செல்வராஜ், தர்மலிங்கம், சந்தானம் தோழியர் சத்தியவாணிமுத்து தோழர் மு. கருணாநிதி ஆகியவர்கள் தங்கள் தொகுதியில் வெற்றி பெற்ற நிலைகளை விளக்கியும், சட்ட. மன்றம்—பாராளுமன்றம் ஆகியவைகளில் மக்களுக்காகப் பணியாற்றுவோம் என்று உறுதியளித்துப் பேசினர்,

பொன்மலை திராவிட வாலிபர் கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி, அவர்கள், பெரியாரின் பொருந்தாத் திருமணத்திற்குப்

பிறகு, பொன்மலை கழகச் சொத்திற்காக நீதி மன்றத்தில் வழக்கு நடந்து இருதரப்பாரும் சேர்ந்த மானேஜிங் கமிட்டி மேற்பார்வையிடுவது என்ற சமரசம் ஏற்பட்டு, பின் சொத்துப்பிரிவினை ஏற்பட்ட நிலைமைகளை விளக்கியும் பொன்மலையில் கழகத்திற்குக் கட்டிடம் வாங்க—'பி' பார்டிக்குச் சொந்தமான ரூ. 4,250-ஐ அண்ணா அவர்களிடம் கொடுப்பதென்ற செயற்குழு தீர்மானத்தையும் விளக்கியபின் அண்ணா அவர்களுக்கும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கும் மலர் மாலைகள் அணிவித்தனர்.

கழகத் தலைவர் ஜி. பராங்குசம் அவர்கள் பொன்மலையில் எதிர்காலத்தில் சிறப்பாகப் பணியாற்ற கழகத்திற்குக் கட்டிடம் அவசியம் தேவை என்றும், விரைவிலேயே கழகத்திற்கு கட்டிடம் வாங்கித்தர வேண்டுமாறு கேட்டுக்கொண்டும் அண்ணா அவர்களிடம் கழகக் கொடியால் தயாரிக்கப்பட்ட ரூ. 4,250 கொண்ட பணமுடிப்பை அளித்தார்.

பிறகு நீண்ட கைதட்டலுக்கிடையே அண்ணா அவர்கள், கருத்துரை ஆற்றினர்.

ரஷ்யா செல்லும் தமிழ்ப் பேராசிரியர்

தமிழ்ப் புலவர்கள் பாராட்டு

14—4—57 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு குடந்தை அரசினர் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் திரு அ. கிருட்டினமூர்த்தி அவர்கள் ரஷ்ய அரசாங்கத்தில் தமிழ்ப் பணியாற்றச் செல்வது குறித்து குடந்தை தமிழாசிரியர்களால், இராசேந்திரா தனிப்பயிற்சிக் கல்லூரியில் ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. விழாத் தொடங்குமுன் தேநீர் விருந்தும், புகைப்படமெடுத்தலும் நடைபெற்றன. விழாவிற்கு வித்துவான் சி. இராசகோபாலபிள்ளை தலைமை தாங்கினார்.

வழியனுப்பு—வாழ்த்துரையொன்று குடந்தைத் தமிழாசிரியர்களால் படித்தளிக்கப்பட்டதும், புலவர்கள் ப. திருநாவுக்கரசு, பா. முத்துவேலன், வீ. ச. நடராசன், எஸ். வைத்தீசுவர ஐயர், எம். கந்தசாமி ஐயர், இ. பரசுராமன், மேரி எக்னேஷியஸ், ப. அமிர்தலிங்கம், எஸ். நடராசன் முதலியோர் பாராட்டுரை வழங்கினர்.

திரு அ. கிருட்டினமூர்த்தி அவர்கள் பாராட்டுரைக்கு தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

இலங்கையில் தோழர் டி. கே. சீனிவாசன்

அழகிரிமன்றம் வரவேற்பு

கொழும்பு, ஏப். 19—

தமிழகத்திலிருந்து இலங்கை சென்றுள்ள தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களுக்கு கொழும்பு அழகிரி மன்றச் சார்பில், மன்றப் பணிமனையில் தோழர் மா. சு. முருகசாமி தலைமையில் ஓர் வரவேற்பளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர்.

தோழர் ஈ. மு. நலம்விரும்பியின் வரவேற்புரைக்குப்பின், மன்றச் செயலாளர் மு. அன்புமலர் பேசினார். பின் மன்றச் சார்பாக தோழர்கள் ஆ. இளங்கோ, பி. ஏ. மாறன் ஆகியோர் டி. கே. சீனிவாசனுக்குக் கைத்தறி ஆடைகள் அளித்தனர்.

தோழர் டி. கே. சீனிவாசன் நன்றி கூறிக்கொண்டு சொற்பொழிவாற்றுகையில், இலங்கையில் தி. மு. கழகம் திராவிடப் பெருங்குடி மக்களின் நல்வாழ்விற்குப் பாடுபட வேண்டுமென்று வேண்டிக்கொண்டதோடு நல்ல அறிவுரைகளும் வழங்கினார்.

பிறகு எல்லோருக்கும் சுவைநீர் விருந்தளிக்கப்பட்டபின் தோழர் பி. எஸ். அறச்செல்வன் நன்றி நவின்றார்.

பிளாஸ்டிக் இருதயம்!

இயங்கும் முறைபற்றி விளக்கம்

சிகாகோ, ஏப். 25—

ஒழுங்காக வேலைசெய்யாத அல்லது இறந்துபோகும் இருதயத்திற்குப் பதிலாக மனித உடலுக்குள் பிளாஸ்டிக் இருதயம் ஒன்றை, என்றோ ஒருநாள் புகுத்திவிட முடியுமாம்!

இந்தக் கருவியில் ஒரு பிளாஸ்டிக் பல்பு இருக்கிறது. அதற்குள் இன்னும் இரண்டு பல்புகள் இருக்கின்றன. பெரிய பல்புகள் புகும் தண்ணீர், உள்ளே இருக்கும் பல்புகளை அழுத்துகிறது; ஒரு பம்புபோல அவற்றை இயங்கவைக்கிறது.

இதற்குமுன் இருதய நோய்க்கு இரண சிகிச்சையின்போது, மிகவும் குறுகிய காலத்திற்கு, உடலுக்கு வெளியே மட்டும் செயற்கை இருதயங்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன.

தொழிலாளர் குடும்பத்திற்கும் மருத்துவ வசதி

இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் ஒப்புக்கொண்டது

புதுடில்லி, ஏப். 25—

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்கீழ், இன்ஷ்யூரன்ஸ் செய்துள்ளவர்களின் குடும்பத்திற்கும் மருத்துவ உதவி அளிப்பது சம்பந்தமான விதிகளையும், மருத்துவ வசதியின் தரத்தையும் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் அங்கீகரித்துள்ளது.

11 மாநிலங்களின் 51 பிரதேசங்களில் ஏறக்குறைய 11,25,000 ஊழியர்களிடை இந்தத் திட்டம் அமுல் நடத்தப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

வடக்கு மண்டலக் குழுவின் பணிகள்

பண்டித பந்த் விளக்கம்

புதுடில்லி, ஏப். 24—

வடக்கு மண்டலக் குழுவின் முதல் கூட்டத்தில் பண்டித பந்த் குழுவின் எதிர்காலப் பணிகளைப் பற்றி விளக்கியுள்ளார்.

இந்த மண்டலத்திற்கு உட்பட்டுள்ள பக்ரா திட்டத்துடன் இமாசலப் பகுதியில் சிக்கியுள்ள நிலத்தைப் பாதுகாக்கவும் வழிகள் வகுக்கப்படுமாம்.

1960-ல் பக்ரா திட்டம் பூர்த்தியடைந்ததும் அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் மக்களைக் குடியமர்த்தும் பணியிலும் குழு ஈடுபடுமாம்.

நங்கல் மின்சாரத் திட்டத்தினால் பயனடைய உள்ள பஞ்சாப், டில்லி, மற்ற வடக்கு மண்டலப் பகுதிகளுக்கிடையே பொதுவான தொழில் முன்னேற்றத் திட்டம், கட்டண விதிப்பு முறை ஆகியவற்றில் ஒரு பொதுவான கொள்கையை மண்டலக் குழு வகுக்குமாம்.

இதேபோன்று பஞ்சாபிலும், இராஜஸ்தானிலும் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன வசதி பெறும் சுமார் முப்பது இலட்சம் ஏக்கர் நிலம் சம்பந்தமாக ஒரு கூட்டுறவு முறையை வகுத்துக்கொண்டு, தண்ணீர்க் கட்டணம், பயிர்த் திட்டம் முதலியவைகளைப் பற்றியும் மண்டலக் குழு ஆராயுமாம்.

இரயில் வசதி இல்லாத இமாசலப் பகுதியுடன் தொடர்பு கொண்டுள்ள சாலைப் போக்குவரத்துச் சாதனங்களை தேசீயமயமாக்குவது சம்பந்தமாகவும் முடிவு செய்ய மண்டலக் குழு முற்படுமாம்.

மேலும், இந்த மண்டலத்தில் உள்ள ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் ஆகியவைகளுக்கிடையே பல பொதுப் பிரச்சினைகள் உள்ளன என்றும், இவை வட எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்பை பெற்றுள்ளவை என்பதையும் நினைவுபடுத்தி, பொருளாதார அடிப்படையில் இவை ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டுள்ளன என்றும், ஜம்மு-காஷ்மீரத்திற்கும் மற்ற இந்தியப் பகுதிகளுக்கும் பஞ்சாப் தொடர்பை ஏற்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

கிழக்கு மண்டலக் குழு முதல் கூட்டம்

கல்கத்தா, ஏப். 25—

கிழக்கு மண்டலக் குழுவினர் முதல் கூட்டம் ஏப்ரல் 30-ந் தேதியன்று மேற்கு வங்க கவர்னர் மாளிகையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பீகார், ஒரிசா, அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் எதும் தயாரிக்கப்படவில்லை. ஆனால், புதிய அமைப்பிற்குப் பிறகு பொதுவாக மாநிலங்களுக்கிடையே எழுந்துள்ள பிரச்சினைகளை பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடும் என்று தெரிய வருகிறது.

வருவாய் கிடைக்கும் தொழிலை சர்க்கார் ஏற்று நடத்தாதது ஏன்?

'இந்த அநீதியை இனியும் சகிக்க வேண்டுமா?'

சிவபுரி தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் தெளிவுரை

சிவபுரி (சிதம்பரம்) தி. மு. கழகச் சார்பில், 22-4-57 மாலை 6-30 மணியளவில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மாணவத் தோழர்களும் விவசாயத் தொழிலாளர்களும் கலந்துகொண்டனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் தில்லை-கணேசன், சி. பி. கணேசன், அறிவுக்கரசன், சிங்காரம், புலவர்-ஆறுமுகம், எஸ். கிட்டப்பா, பொன். சொக்கலிங்கம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இறுதியாக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ் சர்க்கார் பெருங்கிலப் பிரபுக்கள், ஆலை முதலாளிகள், பஸ் போக்கு-வரத்து முதலாளிகள் ஆகியோரின் பக்கபலத்தால் தங்களின் ஆதிக்கத்தை நீடித்துவருகின்றனர். எனவேதான், முக்கிய தொழில்களையெல்லாம் அரசியலாரே மேற்கொண்டு அதன் வருவாய் மூலம் ஏழை—எளியவர்களின் நலனைப் பாதுகாக்கும் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரத் தயங்குகின்றனர். சுதந்திரம் கிடைப்பதற்கு முன், 'முக்கியத் தொழில்களைத் தேசீயமயமாக்குதல் வேண்டும்' என்று கிளர்ச்சி செய்த தேசியத் தலைவர்கள், தங்கள் ஆட்சி 10 ஆண்டுகாலமாக நடைபெற்றும் அப்பிரச்சினையில் கவலை செலுத்தாமல் இருப்பது நேர்மைதானா என்று கேட்கிறோம்.

"குறிப்பாக பஸ் போக்குவரத்து தலைநகரில் சர்க்காரால் நடத்தப்பட்டு, ஆண்டுதோறும் ஏராளமான வருவாயும் கிடைக்கிறது. இன்னும் சற்று நல்ல எண்ணத்துடன் அரசியலார் கடமையைச் செய்தால் ஏராளமான வருவாய் கிடைக்கும். தவிர, சென்னை நகரில் பஸ் தொழிலை சர்க்கார் ஏற்று நடத்துவதைப்போலவே, எல்லா மாவட்டங்களிலும் நடத்தினால் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் சர்க்காருக்கு வருவாய் கிடைக்கும். இதன் மூலம் மக்களின் வரிச் சுமையைக் குறைத்து ஓரளவு நன்மையைச் செய்யக்கூடும்.

"ஆனால் முதலமைச்சர் காமராசர், இப்பிரச்சினையில் கவலை செலுத்தாததேன்? பெரும் பஸ் முதலாளிகளெல்லாம் காங்கிரசுக்குத் துணையாய் நின்று அதன் ஆதிக்கத்தைக் காப்பாற்றிவருகின்றனர். எனவேதான், அரசியலாருக்குக் கிடைக்கவேண்டிய வருவாய், தனிப்பட்ட நபர்களுக்கு உடமையாக்கப்பட்டு வருகிறது. இந்த அநீதியைத் தி. மு. கழகம் பலமுறை எடுத்துக்காட்டி பஸ் தொழிலை முழுதும் அரசியலாரே ஏற்று நடத்தவேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறது.

"இனியாகிலும் தமிழகத்தின் ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள காமராசரும், அவரது சகாக்களும் இப்பிரச்சினையில் ஆவன செய்யப் போகிறார்களா? அல்லது, ஏழை நடுத்தர மக்களுக்கு உடமையாக வேண்டிய பஸ் தொழில் வருமானத்தை தனி நபர்களுக்குச் சொந்தமாக்கி, அதன் மறைவில் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தப் போகின்றார்களா என்று கேட்கிறோம்.

"இவ்வித அநீதிகளை இனியும் பொதுமக்கள் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதைத் தி. மு. கழகம் சர்க்காருக்கு அறிவுறுத்துகிறது."

மேலும் அவர், தேர்தலில் தி. மு. கழகம் பெற்ற வெற்றிகளையும் விவரித்துப் பேசினார்.

பல கிளைகளின் சார்பில் துணைப் பொதுச்செயலாளருக்கு மலர் மாலைகள் — கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

'நம் நாடு' வளர்ச்சிக்கு சிவபுரி தி. மு. கழகம் ரூ. 2; கொற்றல்குடி தி. மு. கழகம் ரூ. 1; குமராட்சி தி. மு. கழகம் ரூ. 1 அன்பளிப்பாக வழங்கினர்.

உளுந்தூர்பேட்டை தி. மு. கழகம் புதிய நிர்வாகிகள் தேர்வு

உளுந்தூர்பேட்டை (தெ. ஆ.) தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், 18—4—57 காலை 10-30 மணிக்கு, 'டிராவலர்ஸ் பங்களா'வில் நடைபெற்றது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கழக வளர்ச்சி, எதிர்கால ஆக்கவேலை ஆகியவைகளைக் குறித்து துணைப் பொதுச்செயலாளரும், மாவட்டச் செயலாளரும் எடுத்துக்கூறினர்.

அடுத்து, தோழர்கள் செல்லப்பன், வகாப், சு. சண்முகம் ஆகியோர் தங்கள் எண்ணங்களைத் தெரிவித்தனர்.

இறுதியாகக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:—

செயலாளர்: க. செல்லப்பன்

துணைச் செயலாளர்: க. பாலகிருஷ்ணன்.

பொருளாளர்: இராஜேசுவரி-சண்முகம்

மாவட்டப் பிரதிநிதி: சு சண்முகம் மற்றும் 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும், ஐந்து பேர் கொண்ட கிளைக் கழகங்கள் அமைப்புக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் செல்லப்பன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

பணிமனைத் துவக்கம்

இக்கிளையின் அலுவலகத்தை 19-4-57 பிற்பகல் 3 மணிக்கு உளுந்தூர்பேட்டையில் அண்ணா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், அ. பொன்னம்பலனார், மற்றும் பல தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

ஏற்காடு மறு தேர்தல்

4 பேர் போட்டி

சேலம், ஏப். 25—

சேலம்—ஏற்காடு மலைசாதியினர் ஒதுக்கப்பட்ட தொகுதியின் சட்டசபை மறுதேர்தலுக்கு திருவாளர்கள் இராமசாமி, கொழந்தை கவுண்டர், ஆண்டி, சின்னா கவுண்டர், அரப்பளி கவுண்டர் ஆகியவர்கள் அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இன்று ஆண்டி என்பவர் தன் அபேட்சா பத்திரத்தை திரும்பப் பெற்றுக் கொண்டார். பிறகு, 4 பேர்களின் அபேட்சா பத்திரங்கள் பரிசீலனைக்குப் பின் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 29-ந்தேதியன்று வாபஸ் வாங்கிக் கொள்வதற்குக் கடைசி நாள்; மே திங்கள் 27-ந்தேதியன்று தேர்தல் நடைபெறும். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஆண்டி கவுண்டர் இறந்ததால் இப்பொழுது மறுதேர்தல் நடைபெறுகிறது. (ந. நி)

மாநிலங்களின் புகார்கள் மிகைப்படுத்தப்பட்டவையாம்!

உணவுப் பொருள் சங்கடம் தலைதூக்குகிறது?

புதுடில்லி, ஏப். 27—

உணவுப் பொருள் நிலைமை மிக மோசமாக இருப்பதாகப் பல்வேறு மாநிலங்களிடமிருந்து கிடைத்துள்ள புகார்களை மத்திய விவசாய உணவு இலாகா பரிசிலனை செய்துவருகிறதாம்.

உணவுத் தானியங்கள் உற்பத்தி, விலைவாசிகள் சம்பந்தமாக மாநிலங்களிலிருந்து கிடைத்துள்ள புள்ளி விவரங்களுடன் இந்தப் புகார்களை ஒப்பிட்டுப் பரிசிலனை செய்கிறார்களாம்!

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் கோதுமை, அரிசி ஆகியவைகள் அதிகமாக உற்பத்தியாகியுள்ளதென்றும், எனவே, மாநிலங்களிலிருந்து கிடைத்துள்ள புகார்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகத் தோன்றுகிறதென்றும் டில்லி உத்தியோக வட்டாரங்கள் கருதுகிறதாம்!

உணவு முனையில் 'போராட்ட' நிலைமை

தமிழகத்தில்உருவாகிறது?

சென்னை, ஏப். 27—

இம்மாநிலம் முழுமையிலும், தொடர்ந்தாற்போல் அரிசி விலை ஏறி வருவதாகத் தெரியவருகிறது.

நெல் விளையும் பகுதிகளில் அரிசி, நெல் கையிருப்புக் குறைந்து வருவதாகவும் தகவல்கள் வந்துள்ளனவாம்! எனவே, சென்னை மாநிலத்தில் மீண்டும் உணவு முனையில் போராட்ட நிலை ஏற்பட்டு வருவதாகத் தெரியவருகிறதாம்.

இதற்கிடையில், சென்னையில் எந்த நிலைமையையும் சமாளிப்பதற்குப் போதிய அளவில் தானியக் கையிருப்பு இருக்கிறதென்று மத்திய அரசாங்கம் கூறி வருகிறது.

புதிய சட்டசபை உறுப்பினர்கள்

29-ந்தேதியன்று பதவிப் பிரமாணமேற்பர்

சென்னை, ஏப். 27—

சென்னை சட்ட சபையின் முதல் கூட்டம்ஏப்ரல் 29-ந்தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கோட்டையில் உள்ள சட்டசபை கட்டிடத்தில்கூடும்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டசபை உறுப்பினர்கள் அன்று பதவிப் பிரமாணமேற்பர்.

கிராக்கிப்படி உயர்வு

பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் தருமாறு உத்தரவு

சென்னை, ஏப். 27—

ரூ. 300-ம் அதற்குக் குறைவாகவும், ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு, அரசாங்கம் சமீபத்தில் அறிவித்த ஊதிய விகிதத்தின் அடிப்படையில் சென்னை பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் அளிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் முதல் இந்தக் கிராக்கிப்படி உயர்வு அமுலாகிறது.

நல்ல முடிவு!

நாகபுரி, ஏப். 25—

அரசாங்க அலுவலகங்களிலும், உள்ளாட்சி மன்றங்களிலும் தனிப்பட்ட நிறுவனங்களிலும் பணியாற்றும் முழு நேர ஊழியர்களும் நாகபுரி பல்கலைக் கழகத்தின் பல்வேறு பரீட்சைகளுக்கும் தனிப்பட எழுதலாம் என்று கல்விக் குழு முடிவு செய்துள்ளதாம். ஆனால் அவர்கள் பல்கலைக் கழகத்தின் கல்வி எல்லைக்குள் குடியிருப்பவர்களாக இருக்க வேண்டுமாம்.

குடியரசுத் தலைவர் தேர்தல்: காரேயின் ஆட்சேபனை

நாகபுரி, ஏப். 26—

"மக்கள் சபைக்கான தேர்தல்கள் இமாசலப் பகுதியில் இன்னும் நடைபெறவில்லை; எனவே, இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தல் இப்போது நடைபெறக் கூடாது" என்று, டாக்டர் காரே நீதிமன்றத்தில் மனுச் செய்துக் கொண்டுள்ளாராம்.

அமெரிக்க அமைச்சரின் சாகசப் பேச்சு!

வாஷிங்டன், ஏப். 25—

"அமெரிக்க விஞ்ஞான நிபுணர்களின் கருத்தின்படி அணு ஆயுதச் சோதனைகளால் அவ்வளவு அபாயமிருப்பதாகத் தெரியவில்லை; எனினும், வேறுவிதமான விஞ்ஞானக் கருத்து அறிவிக்கப்படுமானால், அதற்கேற்றபடி அமெரிக்கா தன்னுடைய நிலையை மாற்றிக்கொள்ளும்" என்று அமெரிக்க அமைச்சர் டல்லஸ் கூறியுள்ளார்.

ஆயுதக் குறைப்புப் பிரச்சினையிலிருந்து அணு சக்தி ஆயுத சோதனை தடையைப் பிரிப்பது கஷ்டமானதாக இருக்குமென்று அவர் கருதுகிறாராம்!

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் என்று நம்பமுடியாத ஒரு சர்க்காருடன் இது பற்றி பேசவேண்டியிருப்பதுதான் அமெரிக்காவுக்குள்ள பெரிய சங்கடமாம்!

சோதனைகளைகண்டுபிடிக்க குழு வேண்டுமாம்!

லண்டன், ஏப். 25—

எல்லாவிதமான அணு சோதனைகளையும் கண்டு பிடிப்பது சாத்தியமா என்பதை ஆராய்வதற்குக் கிழக்கு—மேற்கு நிபுணர்களடங்கிய ஐ. நா. குழு ஒன்றை நிறுவலாமென ஜப்பானிய சர்க்கார் யோசனை ஒன்று கூறியிருக்கிறது.

கள்ளக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கை

பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்

சென்னை, ஏப். 25—

1957 மார்ச் மாதத்தில் இலங்கைக்குக் கள்ளத்தனமாகக் குடியேறவிருந்த 52 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

போலீசாரின் 24 சோதனைகள் மூலம் கள்ளத்தனமாக குடியேறவிருந்த 15 தரகர்களும், 16 கள்ளத்தோணியாளர்களும் பிடிபட்டனராம்.

இலங்கை அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக 270 கள்ளக் குடியேற்றக்காரர்கள் வெளியேற்றப்பட்டனராம். அவர்கள் தந்தத் தகவல் மூலம் 14 தரகர்கள்—16 தோணியாளர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவாம்!

வேலூர் மருத்துவக் கல்லூரிக்கு நன்கொடை

புதுடில்லி, ஏப். 25—

இலண்டன் 'வெல்கம் பவுண்டேஷன்' என்ற நிறுவனத்தார் அறிவித்துள்ள பல்வேறு நன்கொடைகளில், வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரிக்கு சுமார் ரூ. 1,40,000 மானியமும் அடங்கியுள்ளது.

இதைக் கொண்டு வயிற்றுப் போக்குநோய், உணவு சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடைபெறும்.

சர்க்கார் கட்சி தலைவர்கள்

சென்னை சட்டசபையில் சி. சுப்பிரமணியம் சர்க்கார் கட்சித் தலைவராக இருப்பார்; மேல்சபையில் ஆர். வெங்கட்ராமன் சர்க்கார் கட்சித் தலைவராக இருப்பார் என்று காமராசர் கூறியுள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

தண்டராம்பட்டு:

நேதாஜி டூரிங் சினிமா கொட்டகையில்
28—4—57 மாலை 3-மணிக்கு
தலைவர்: ம. சு. நடராசன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
இரா. தருமலிங்கம்

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. தருமலிங்கம் ஆகியோருக்கு தண்டராம்பட்டு ஊராண்மைக் கழகச் சார்பிலும், தி. மு. கழகச் சார்பிலும் வரவேற்பிதழ் படித்துக் கொடுக்கப்படும்.

★

96—பருத்தியூர்:

பெரியகுளத்தின் மேல்கரையில்
29—4—57 மாலை 6-மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர்: பாவாடை
பேசுவோர்:
கே. பெரியசாமி
சி. கிருஷ்ணமூர்த்தி

சென்னை 4-வது வட்ட தி. மு. க பொது உறுப்பினர் கூட்டம்

27—4—57 இரவு 7 மணிக்கு, மேற்படி வட்ட பொது உறுப்பினர் கூட்டம் சோலையப்பன் தெரு, 112-எண் இல்லத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சொற்பயிற்சிக் கூட்டம்

28-4-57 காலை 10 மணிக்கு, சென்னை—இராயபுரம், மார்க்கெட் சந்து மக்கள் முன்னேற்ற மன்றப் பணிமனையில் புலவர் தியாகராசன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, 'நாடும்—நாமும்' என்ற தலைப்பில் தோழர்கள் தி. ந. மதிவாணன், எம். ஆர். சி. இராமச்சந்திரன், கேசவன் ஆகியோர் பேசுவர்.

சர்க்கரைப் பொங்கல் வழங்குதல்

29—4—57 அன்று இராயபுரம் நண்பர்களால் சென்னை—இராயபுரம், மன்னார்சாமி கோயில் தெரு 87-ம் எண்ணுள்ள இடத்தில், முதன் முறையாகச் சட்டமன்றம் செல்லும் தி. மு. கழக சட்ட மன்ற உறுப்பினர்களைப் பாராட்டுமுகத்தான் பொதுமக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும்.

திருமண விருந்து

28—4—57 காலை 10 மணிக்கு மாங்காடு—தோழர் ஆ. கிருஷ்ணன்—தோழியர் மு. சரோஜினி ஆகியோரின் பதிவுத் திருமணத்தை முன்னிட்டு, சென்னை—திருவொற்றியூர் சன்னதித் தெருவில், மாங்காடு எல்லப்பச் செட்டியார் சத்திரத்தில் திருமண விருந்து நடைபெறும்.

இராசா ரவிவர்மா பிறந்த தின விழா

29—4—57 மாலை 6 மணிக்கு, ரவிவர்மா கலைக் கழகத்தாரால், சென்னை—எழும்பூர், அரசாங்க மியூசியம் சென்டனரி மன்றத்தில், ரவிவர்மாவின் 109-வது பிறந்ததின விழாவுடன் 5-நாள் கலை விழாவும், கண்காட்சியும் நடைபெறும்; நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பிறந்த தின விழாவைத் துவக்கி வைத்தும், கண்காட்சியைத் திறந்து வைத்தும் சொற்பொழிவாற்றுவார். தோழர் வி. பி. வி. இராசன், 'ரவிவர்மாவும்—அவரது கலையும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

நீத்தார் நினைவு நாள்

30—4—57 செவ்வாய் காலை 9 மணிக்கு, கொள்ளிடம் ஆற்றங்கரையில், தோழர் அ. பெ. தருமலிங்கம் அவர்களின் அன்னையார் திருவாட்டி ஆச்சிக்கண்ணு அம்மையார் (21—4—57ல்) இயற்கையெய்தியது குறித்து 'நீத்தார் நினைவு நாள்' நடைபெறும்.

தியாகராயா பைன் ஆர்ட்ஸ் அகெடமி (Regd.)

அண்ணா, மு. கருணாநிதி
பாராட்டு விழா

28—4—57 ஞாயிறு மாலை 5-மணிக்கு
வண்ணையம்பதி
தியாகராயர் கலா மண்டபத்தில்
★
7-மணிக்கு
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். குழுவினர் நடிக்கும்

'இன்பக்கனவு'

(தமிழ் சமூக நாடகம்)

V. C. ஸ்ரீராமுலு செட்டியார்
தலைவர்

R. L. லிங்கராஜ்,
S. M. ராமன் B A. (Hons)
செயலாளர்கள்

கட்டணம்: ரூ. 5, 3, 2, 1, அணா 12.

தியாகராயர்கவின்கலைமன்ற சார்பில்

அண்ணா, மு. கருணாநிதி ஆகியோருக்குப் பாராட்டு விழா

28—4—57 மாலை 4-30 மணியளவில், வண்ணை — தியாகராயர் கலா மண்டபத்தில் தேனீர் விருந்தும், 5-மணியளவில் பாராட்டுரையும் நடைபெறும்.

தோழர்கள் க. அறிவழகன், சி. பார்த்தசாரதி (நாயக்கர்), மற்றும் பலர் பாராட்டுரை வழங்குவர்.

இரவு 7-மணிக்கு, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெறும்.

பாராட்டுக் கூட்டம்

29-4-57 மாலை 6 மணிக்கு சென்னை—சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழகச் சார்பில் சேத்துப்பட்டு — வைத்தியநாத முதலித் தெருவில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோருக்குப் பாராட்டு விழா நடைபெறும்; அதுபோது தமிழ்வேள் பி. டி. இராசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்கள்.

வேண்டுகோள்

மே திங்களில் கூட்டங்களுக்கு எழுதி நாள் கிடைக்கப்பெறாத தோழர்கள், ஜுன் திங்களில் நாள் தரும்படி கேட்டிருக்கிறார்கள். நான் மே திங்கள் 5-ம் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் மே தின விழாவில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருந்தேன்; ஆனால், இலங்கை செல்வதற்கான உரிமை கிடைக்கப்பெறாததால் ஜுன் திங்களில் யாழ்ப்பாணம், இலங்கை முதலான பகுதிகளுக்குச் செல்வதால், ஜுன் திங்களில் நான் உள் நாட்டில் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள இயலாமைக்கு வருந்துவதோடு தோழர்கள் பெரிதும் மன்னிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அன்பன்
சி. பி. சிற்றரசு

இலவச முடி திருத்தம்

மே தினத்தை ஒட்டி, 30-4-57 காலையிலிருந்து மாலை வரை, இலவச முடிதிருத்தம் செய்யப்போவதாக சென்னை—இராயபுரம், எண் 18 கல்மண்டபம் ரோடு, தோழர் க. மணி அறிவிக்கிறார்.

தமிழ் இளைஞர் மன்றம் திறப்பு விழா

28—4—57 மாலை 6½ மணிக்கு சென்னை—பழைய மாம்பலம், எல்லையம்மன் கோயில் தெரு, குளக்கரையருகில், தோழர் ஜே. லோகய்யா தலைமையில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மேற்படி மன்றத்தைத் திறந்துவைத்துப் பேசுவார். தோழர்கள் அ. பொ. அரசு, டி. நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை-வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம்

28-4-57 காலை 9-மணிக்கு தனலட்சுமி உயர்நிலைத் துவக்கப் பள்ளியில், மேற்படி கழகச் சார்பில், திரு. ஆ. கஜபதி நாயகர் தலைமையில், தோழர் சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், திருக்குறளில் 'துறவு இயலை' துவக்கி வைத்துப் பேசுவார்.

சென்னை—14வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

28—4—57 காலை 9 மணிக்கு சென்னை—எண் 43, பந்தர் தெருவில் மேற்படி உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை 35-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

28—4—57 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் (53/2 ஆற்காட்டுச் சாலை), தோழர் கோ. செங்குட்டுவன் முன்னிலையில், இடைக்கால நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

சென்னை-நுங்கம்பாக்கம் ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகம்

28—4—57 காலை 9 மணிக்கு மேற்படி படிப்பக மாதாந்திர செயற்குழு உறுப்பினர் கூட்டம் தோழர் டி. சே. இளங்கோ தலைமையில் நடைபெறும்.

குளிர் நீரகம் திறப்பு விழா

27-4-57 பகல் 11 மணி முதல் சென்னை—சூளை தி. மு. கழகச் சார்பில், சூளை—நெடுஞ்சாலையில் தோழர் காண்டா—முனுசாமி தலைமையில் பொதுமக்களுக்கு உதவ குளிர்நீரகம் திறக்கப்படும்.

'சுகாதாரப் பிரச்சாரம்'

28—4—57 காலை 7 மணிக்கு தோழர் ந. முனுசாமி தலைமையில் சென்னை 4-வது வட்ட இளங்கோ கலை மன்றத் தோழர்கள் 'சுகாதாரப் பிரச்சாரம்' செய்வார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.